IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP 10 /2018

Deposition of RW 2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 30.04.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | உஷாராணி | **Caste** | : | |
| **W/o.** | : | ராஜேஷ் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :-**

நான் சேலம் நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் மெடிக்கல் ரெக்கார்ட்ஸ்சில் இன்சார்ஜ்ராக பணி செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். மனுதாரர் கண்ணன் என்பவருக்கு சாட்சியமளிக்க எங்கள் மருத்துவமனையில் வழங்கிய அனுமதி கடிதம் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் சாட்சி சம்மனில் கண்டுள்ள ஆவணங்களை சான்றிட்ட நகலாக தாக்கல் செய்கிறேன். **விபத்து பதிவேட்டு நகல் எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.12.2017 முதல் 30.12.2017 ந்தேதி வரை மருத்துவ சிகிச்சை எடுக்கப்பட்டு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதற்கான டிஸ்சார்ஜ் சம்மரி தாக்கல் செய்கிறேன். டிஸ்சார்ஜ் சம்மரி **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற மனுதாரர் கண்ணன் என்பவருக்கு மருத்துவ பில்கள் ரூ.18735 ஆகும். மருந்துகளுக்கான பில் ரூ.2,507/- ஆகும். மேற்படி இரண்டு ஆவணங்களும் **எ.ம.சா.ஆ.4 மற்றும் எ.ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

ஒம்/-உஷாராணி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.

IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP 10 /2018

Deposition of RW 3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 30.04.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | Dr.கேசவமூர்த்தி | **Caste** | : | |
| **S/o.** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கோவை KMCH மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணி செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். மனுதாரர் கண்ணன் என்பவருக்கு சாட்சியமளிக்க எங்கள் மருத்துவமனையில் வழங்கிய அனுமதி கடிதம் **எ.ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் சாட்சி சம்மனில் கண்டுள்ள ஆவணங்களை சான்றிட்ட நகலாக தாக்கல் செய்கிறேன். **விபத்து பதிவேட்டு நகல் எ.ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயச்சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். காயச்சான்றிதழ் **எ.ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.12.2017 முதல் 18.01.2018 ந்தேதி வரை மருத்துவ சிகிச்சை எடுக்கப்பட்டு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதற்கான டிஸ்சார்ஜ் சம்மரி தாக்கல் செய்கிறேன். டிஸ்சார்ஜ் சம்மரி **எ.ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற மனுதாரர் கண்ணன் என்பவருக்கு மருத்துவ பில்கள் ரூ.5,99,743/- ஆகும். மேற்படி கண்ணன் என்பவருக்கு இன்சூரன்ஸ் மூலமாக வரவு வைக்கப்பட்ட தொகை ரூ.2,42,864/- ஆகும். அவர் செலுத்திய தொகை ரூ.3,56,873/- ஆகும். அதற்கான பில் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ.10** ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான பில்களை மட்டும் தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.அவர் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான பில்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7

ஆவணம் என்றால் சரிதான். எங்கள் மருத்துவமனையில் கொடுக்கப்பட்டுள்ள மருத்தவ ரசீதுகள் மட்டும் மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான ரசீதுகள் ஆகும். அதில் வேறு மருத்துவமனையால் கொடுக்கப்பட்டுள்ள ரசீதுகளுக்கு என்னால் பதில் அளிக்க இயலாது.

ஒம்/—Dr.கேசவமூர்த்தி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.